**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017**

| தரம் :- 10 | கத்தோலிக்க திருமறை - I | நேரம்:- 2 மணித்தியாலம் |
|---|---|---|

**சுட்டெண்:- …………………..**

பகுதி - I

❖ **மிகச் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01) எழுத்து வடிவம் பெற்ற இறைவெளிப்பாடு எது.
1. இயேசு கிறிஸ்து 2. பழைய ஏற்பாடு
3. திருவிவிலியம் 4. புதிய ஏற்பாடு

02) திருவிவிலியத்தில் உள்ளடங்காத கத்தோலிக்க திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதனை மூலம் எது?
1. திருவிவிலியம் 2. திருச்சபை பாரம்பரியம்
3. திருவெளிப்பாடு 4. திருமுகம்

03) ஆண்டவரின் நண்பன் என்ற அர்த்தம் கொண்ட பெயரை உடையவர்.
1. திருத்தூதர் 2. யோவான்
3. பேதுரு 4. தெயோபில்

04) தூய பவுலினால் எழுதப்பட்ட திருமுகங்கள் எத்தனை?
1. 13 2. 12 3. 04 4. 07

05) பவுலின் பெயரைப் பயன்படுத்தி வேறு நபர்களால் எழுதப்பட்ட திருமுகங்களில் அடங்காதது.
1. தெசலோனிக்கர் 2. திமோத்தேயு
3. பிலமோன் 4. தீத்து

06) திருவெளிப்பாட்டு நூல் எழுதப்பட்ட காலப்பகுதி.
1. கி.பி 65 – 70 2. கி.பி 90 - 100
3. கி.பி 70 – 90 4. கி.பி 80 - 96

07) "ஆண்டவர் சாலமோனுக்கு கனவில் தோன்றிய இடம்.
1. சிக்கார் 2. கிபயோன் 3. பெத்தேல் 4. சீனாய்

08) ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல்கள் அல்லாதது.
1. யோபு 2. திருப்பாடல்கள்
3. யோசுவா 4. சபை உரையாளர்.

09) இயேசுவைக் கைது செய்து சென்ற இடத்தில் "நீ மெசியாதனா? என்ற கேள்வியைக் கேட்டவர்கள்.
1. தலைமைக்குருக்கள் 2. காவலர்கள்
3. பிலாத்து 4. மூப்பர் சங்கத்தினர்

10) இயேசு கை செய்யப்பட்ட காலப்பகுதியில் கலிலேயா பகுதி யாருடைய ஆட்சிக்குட்பட்டிருந்தது.
1. ஏரோது அந்திப்பாஸ் 2. தலைமை குரு 3. பிலாத்து 4. சீசர்

The National e-learning Portal for The General Education

11) யூத மக்களுக்கு ஐம்பது என்னும் பொருளுடைய பிரதான விழா எது.

1. பாஸ்கா
2. கூடார விழா
3. பாவப்பரிகாரப்பலி
4. பெந்தக்கோஸ்து

கீழ்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 12 – 15 வினாக்களுக்கு விடை தருக.

A - தூய பேதுரு
B - தூய ஸ்தேவான்
C - தூய யாக்போபு
D - தூய ஆவி

12) திருத்தொண்டராக மட்டுமல்லாமல் நற்செய்தியையும் போதித்தவர்.

1. A  2. B  3. C  4. D

13) தூய சந்தியாகு என அழைக்கப்பட்ட திருத்தூதர்

1. D  2. A  3. B  4. C

14) திருத்தூதர்கள் இறைவார்த்தைக்கு சான்று பகர திடம் கொடுத்தவர்.

1. B  2. D  3. C  4. A

15) இயேசுவினால் நேரடியாக அழைக்கப்பட்ட திருத்தூதர்களில் அடங்குபவர்கள்.

1. A, B  2. A, D  3. A, C  4. B, C

16) தூய பவுல் ............................ கோத்திரத்தைச் சேர்ந்தவரும் தர்சு நகரில் பிறந்தவருமாவார்.

1. யூதா  2. பெஞ்சின்  3. லேவி  4. ரூபன்

17) சவுல் திருமுழுக்குப் பெற உதவிய தமஸ்கு நகரைச் சேர்ந்த சீடர்.

1. ஸ்தேவான்  2. யாக்கோப்பு  3. யோவான்  4. அனனியா

18) சகோதரர்களால் அழைக்கப்பட்ட சீடர்கள்.

1. யாக்கோப்பு, பேதுரு
2. பேதுரு, பவுல்
3. யாக்கோப்பு, யோவான்
4. பேதுரு, யோவான்

19) பேதுரு என்பதன் பொருள்,

1. பாறை
2. கடவுளின் நண்பன்
3. கடவுளின் கொடை
4. பேறு பெற்றவன்

20)

| அ | ஆ |
|---|---|
| A - போர்த்துக்கேயர் காலம் | E – கி.பி 1796 – 1948 |
| B - ஒல்லாந்தர் காலம் | F – கி.பி 1948 |
| C - ஆங்கிலேயர் காலம் | G – கி.பி 1505 – 1658 |
| D - சுதந்திர காலம் | H – கி.பி 1658 - 1796 |

மிகச் சரியான தொடர்புடைய தொகுதியாக அமைவது,

1. A – H, B – G, C – F, D – E
2. A – G, B – H, C – E, D - F
3. A – E, B – F, C – G, D – H
4. A – G, B – E, C – F, D – H

21) இலங்கையில் பன்னிரண்டு மறைமாவட்டங்கள் உருவாகிய ஆண்டு,
1. 2016 2. 2012 3. 2011 4. 2010

22) கத்தோலிக்க திருவழிபாட்டின் ஊற்றும் உச்சியுமாய் இருப்பது,
1. திருச்செபமாலை 2. திருப்புகழ்மாலை
3. திருவருட்சாதனங்கள் 4. நற்கருணை

23) இயேசு பெரிய வியாழன் அன்று நிறுவிய அருட்சாதனங்களாவன.
1. நற்கருணை, குருத்துவம் 2. ஒப்புரவு, நற்கருணை
3. திருமுழுக்கு, குருத்துவம் 4. நற்கருணை, திருமுழுக்கு

24) தற்போதைய திருத்தந்தை பெற்றுக் கொண்ட விருதும் காலமும்.
1. உதவும் தந்தை 2013 2. சிறந்த மனிதர் 2015
3. உதவும் தந்தை 2015 4. சிறந்த மனிதர் 2013

25) தூய யோசவ்வாஸ் இறக்கும் போது அவரது வயது,
1. 62 2. 63 3. 60 4. 65

26) "விளங்கிக் கொள்ளுங்கள் எவரும் வாழ்நாள் முழுவதும் கவனியாது விட்ட எதனையுமே அவரது மரண நேரத்தில் ………………"
1. நிறைவேற்ற முடியாது 2. கவனிக்க முடியாது
3. அடைய முடியாது 4. காணமுடியாது

27) முதல் முறையாக அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்து கடவுளுக்கு ஒப்புக் கொடுத்தவர்.
1. ஏலி 2. ஆபிரகாம் 3. ஆரோன் 4. மெல்கிசேதேக்

28) ஒத்தமை நற்செய்தியாளர்கள் அல்லாதவர்.
1. தூய மத்தேயு 2. தூய மாற்கு
3. தூய லூக்கா 4. தூய யோவான்

29) "குறொசிங் த திறஷ்கோல்ட் ஒப் ஹோப்" [crossing the threshold] of hope] என்ற நூலை எழுதிய திருத்தந்தை.
1. பதினாறாம் பெனடிக்ற் 2. பத்தாம் பத்திநாதர்
3. தூய இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் 4. முதலாம் பிரான்சிஸ்

30) நம்பிக்கை, எதிர்நோக்கு அன்பை அடிப்படையாகக் கொண்ட கட்டளை எது?
1. முதலாம் கட்டளை 2. இரண்டாம் கட்டளை
3. மூன்றாம் கட்டளை 4. நான்காம் கட்டளை

31) ஞாயிறு தினத்தை தூய்மையாக அனுசரிக்க முதலில் செய்ய வேண்டிய கடமையாவது,
1. மறைக்கல்விக்கு செல்வது 2. பக்திச் சபைக்கு செல்வது
3. ஞாயிறு திருப்பலியில் பங்கேற்பது 4. தானதருமம் செய்வது.

32) தனக்கும் அயலவனுக்கம் இறைவனுக்கும் எதிராகச் செய்யும் பாவமாக அமைவது,
1. கருக்கலைப்பு 2. களவு 3. கொலை 4. தற்கொலை

33) ஒருவர் தம்முடைய பாலினத்தன்மையை ஆக்கபூர்வமாக தம்முள் முறைப்படுத்தல் ………………… எனப்படும்.
1. கற்பு 2. விசுவாசம் 3. ஒழுக்கம் 4. தியானம்

34) கூற்று :- அனனியா நிலத்தை விற்ற தொகையின் ஒரு பகுதியை திருத்தூதரின் காலடியில் வைத்தார்
காரணம் :- ஏனெனில் அனனியா கடவுள் முன் உண்மையுள்ளவர்.
1. கூற்றும் சரி காரணமும் சரி 2. கூற்றுப்பிழை காரணம் பிழை
3. கூற்றும் காரணமும் பிழை 4. கூற்று பிழை காரணம் சரி

35) தவக்காலத்திலும் பாஸ்கா காலத்திலும் பயன்படுத்தப்படும் நற்செய்தி.
1. யோவான் 2. மத்தேயு 3. மாற்கு 4. லூக்கா

36) திருவழிபாட்டின் பிரதான மூன்று பகுதிகளில் ஒன்று அல்லாதது,
1. திருப்புகழ்மாலை 2. திருப்பலி
3. திருச்செபமாலை 4. அருளடையாளங்கள்

37) இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கும் சொல்.
1. பரூசியா 2. லாஒஸ் 3. எர்கோன் 4. லிட்டர்ஜியா

38) உன்னத குருவின் வேண்டுதல் எத்தனை பகுதிகளைக் கொண்டது.
1. 02 2. 03 3. 04 4. 05

39) கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்புக்காக செபிக்கும் வாரமாக அமைவது,
1. ஜனவரி 18 – 25 2. ஜனவரி 15 – 22
3. ஜனவரி 6 – 11 4. ஜனவரி 16 – 23

40) இயேசு கெத்சமனி என்னும் இடத்தில் செபித்த விதம்
1. மௌனமாக 2. கரங்களை விரித்து
3. தரையில் விழுந்து 4. எழுந்து நின்று

(2 x 20 = 40 புள்ளிகள்)

e-தக்சலாவ The National e-learning Portal for The General Education

| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**<br>**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017** | |

| | | |
|---|---|---|
| **தரம் :- 10** | **கத்தோலிக்க திருமறை - II** | |

## பகுதி - II

❖ **முதலாம் வினாவிற்கும் ஏனைய வினாக்களில் இருந்து நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. சுருக்கமான விடை தருக.
   1) இறைவார்த்தையின் மூலங்கள் இரண்டு தருக.
   2) தூய பவுல் திருமுகங்களை எழுதியதன் நோக்கங்கள் இரண்டு தருக.
   3) வெளிப்பாட்டு இலக்கியத்தில் வரும் அடையாளங்கள் இரண்டு தருக.
   4) இயேசு சிலுவையில் அறையப்பட்ட பின்னர் கூறிய வாக்கியங்கள் இரண்டு தருக.
   5) இயேசு பேதுருவிடம் மூன்று பொறுப்புக்களை ஒப்படைத்த போது கூறிய வார்த்தைகள் இரண்டு தருக.
   6) இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் பணிபுரிய வந்த மறைபோதக சபைகள் இரண்டு தருக.
   7) நற்கருணையின் முன்னடையாளங்களாக நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்படும் இரண்டு விடயங்கள் தருக.
   8) இறையன்புக்கு எதிரான பாவங்கள் இரண்டு தருக.
   9) ஆதித் திருச்சபையில் உண்மையுள்ளவர்களாக வாழாததால் மரணமடைந்த இருவர்?
   10) திருப்பலியின் பிரதான இரண்டு பகுதிகள் எவை? 10 x 2 = 20 புள்ளிகள்

2. I. ஞானம் என்பதற்கு பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் எது?
   II. எபிரேய ஞானத்தின் பிரிவுகள் மூன்று எழுதுக.
   III. உமது வாழ்வில் ஞானமுள்ள விதத்தில் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் ஐந்து எழுதுக.
   2+3+5=10 புள்ளிகள்

3. I. இயேசு கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட இடங்கள் தருக.
   II. உயிர்த்த இயேசு காட்சி கொடுத்த சந்தர்ப்பங்கள் மூன்று தருக.
   III. தவறிழைப்போர் திருந்தி வாழ இறைவனிடம் மன்னிப்பு வேண்டி செபம் ஒன்று எழுதுக. 2+3+5=10 புள்ளிகள்

4. I. பழைய ஏற்பாட்டு வரலாற்றில் பலி செலுத்துவதன் நோக்கங்கள் இரண்டினை எழுதுக.
   II. எரி பலிக்காக பயன்படுத்திய பொருட்கள் மூன்று தருக.
   III. பிறருக்காக உம்மைப் பலியாக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.
   2+3+5=10 புள்ளிகள்

The National e-learning Portal for The General Education

5. I. முதலாம் கட்டடையில் அடிப்படையாகக் கூறப்படும் பண்புகள் மூன்று தருக.

II. இரண்டாம் கட்டளைக்கு எதிரான செயல்கள் மூன்று தருக.

III. திருப்பலி ஒப்புக் கொடுப்பதன் நோக்கங்கள் நான்கு தருக.

2+3+5=10 புள்ளிகள்

6. ஞாயிறு திருப்பலிக்கான நற்செய்தி வாசகங்கள்

I. எத்தனை ஆண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

II. ஒவ்வொரு ஆண்டுக்குமான நற்செய்தி நூல்களை குறிப்பிடுக.

III. பரிசுத்த வாரத்தின் முக்கியமான திருவழிபாடுகளை குறிப்பிட்டு விளக்குக.

2+3+5=10 புள்ளிகள்

7. விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

I. தூய யோசவ்வாஸ் அடிகளார்

II. அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்

III. தூய அன்னை திரேசா

iv. அருட்பணி மைக்கல் றொட்றிகோ அடிகளார்.

2+3+5=10 புள்ளிகள்

The National e-learning Portal for The General Education